சுருக்கம்

நிருவாகம் – நீதியரசர் முனைவர் ஏ.கே.ராஜன் அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட நிருவாகச் சீர்திருத்தக் குழு இரண்டாவது அறிக்கை "தற்போது நடைமுறையில் உள்ள "டாட்டன்ஹாம்" முறை திருத்தி அமைக்கப்படவேண்டும்" என்ற பரிந்துரை மீது மேல் நடவடிக்கை தொடர அமைக்கப்பட்ட குழு – திருத்தம் வெளியிடப்படுகிறது.

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (நிசீ 2) துறை

அரசாணை (நிலை) எண்: 99

நாள்: 12.8.2011
ஆடி–27,
திருவள்ளுவர் ஆண்டு 2042.

படிக்கப்பட்டது:

1 அரசாணை (நிலை) எண். 132, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (நிசீ–1) துறை, நாள் 16.09.2010.

2 அரசாணை (நிலை ) எண். 57, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (நிசீ–2) துறை, நாள் 9.6.2011.

*****

ஆணை

மேலே வரிசை எண் 2–ல் படிக்கப்பட்ட அரசாணையில் டாக்டர் நீதியரசர் ஏ.கே. ராஜன் தலைமையில் அமைந்த நிருவாகச் சீர்திருத்தக் குழுவின் இரண்டாவது அறிக்கையில் தற்பொழுது நடைமுறையிலுள்ள டாட்டன்ஹாம் முறை திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்றும், மின் ஆளுகையின் அடிப்படையில் புதிய நடைமுறை உருவாக்கப்பட வேண்டும் என்றும் இப்பரிந்துரையின் மீது மேல் நடவடிக்கை தொடர அமைக்கப்பட்ட குழுவில் செயலாளர், தகவல் தொழில் நுட்பத் துறை அவர்களையும் ஒரு உறுப்பினராகச் சேர்த்து மேற்படி அரசாணைக்கு திருத்தம் வெளியிடப்படுகிறது.

ம. குற்றாலிங்கம்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

முதன்மைச் செயலாளர், வருவாய்த் துறை, தலைமைச் செயலகம், சென்னை –9.
முதன்மைச் செயலாளர், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
வருவாய் நிருவாக ஆணையர், சென்னை –5.
செயலாளர் தகவல் தொழில் நுட்பத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.

<u>நகல்</u>

அனைத்துத் துறைச் செயலாளர்கள், தலைமைச் செயலகம், சென்னை—9.
அனைத்துத் துறைகள் (அ.ந.மு) தலைமைச் செயலகம், சென்னை—9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையிலுள்ள அனைத்து அலுவலர்கள்/ பிரிவுகள், தலைமைச் செயலகம், சென்னை—9.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை—9.
மாண்புமிகு அமைச்சர் ( செய்தி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள்), அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை—9.
தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர், தலைமைச் செயலகம், சென்னை—9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச்செயலர், பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—9.
உதிரி / இருப்புக் கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

16.8.20[illegible]
பிரிவு அலுவலர்.